மாண்புமிகு திரு. க. இராசாராம் : சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூரில் அரசு தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் மருத்துவமனை கட்டுவதற்கான செயற் குறிப்பு எதும் ஆய்வில் இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : மேட்டூர் கெமிகல்ஸ், டெக்ஸ்டைல்ஸ் போன்ற ஏராளமான தொழில்கள் அங்கு இருக்கின்றன. ஏராளமான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ஆகவே, அங்கு இனியாவது ஒரு மருத்துவ மனை தொழிலாளர்களுக்காகக் கட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தனியான மருத்துவ மனை இல்லையென்றாலும் மேட்டூர் அப்பர் ; மேட்டூர் லோயர் , கோனூர் மேட்டூர் III ஆகிய மூன்று இடங்களில் இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் உள்ளன. அதோடு கூட அரசாங்கப் பொது மருத்துவ மனையில் தொழிலாளர்களுக்காக 17 படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

Domestic power consumption.

* 450*Q*.— THIRU N. K. PALANISAMY : Will the Hon' the Minister for Electricity be pleased to state :

(*a*) whether it is a fact that the Government have raised the restrictions on domestic power consumption ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) திங்கள் ஒன்றுக்கு 150 யூனிட்டுகளுக்கு மேல் மின்சக்தியைப் பயன்படுத்தினால் சாதாரண கட்டணத்தைப் போல் இரு மடங்கு கட்டணம் வசூலிக்கப்படும். ஒரு தனிப்பட்ட மீட்டரிலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட வீட்டுக்காரர்கள் மின்சக்தியை வீட்டு உபயோகத்திற்கு பயன்படுத்தும் நேர்வில், 1—9—1971 முதல் தொடர்ச்சியான எந்த மூன்று மாத காலத்தில் சராசரியாக பயன்படுத்தப்பட்ட மின்சக்தியின் அடிப்படையில் மின்சக்தி அளவு (quota) முடிவு செய்யப்படும். அந்த அளவுக்கு மேல் அதிகப்படியாக பயன்படுத்தப்படும் மின்சாரத்திறகு இரட்டிப்புக் கட்டணம் வசூலிக்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : ஒரே மீட்டர் நாலைந்து வீடுகளுக்கு சேர்ந்து இருக்கிறது. 150 யூனிட்டுக்கு மேல் பயன்படுத்ததும்போது இரு மடங்கு கட்டணம் என்று சொன்னால் அதிகமாக ஆவதால் சலுகை கொடுக்கும் முறையில் ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அவர்களுக்கு எந்தவிதமான நஷ்டமும் ஏற்படாதவாறு மூன்று மாதத்திற்கான சராசரி பார்த்து அப்படியே கொடுக்கப்படுகிறது.

1974 மார்ச் 15]

திரு. எ ஸ். தேவராசன் : நீலகிரி அணைக்கட்டுகளில் நீர்த் தேக்கம் திருப்திகரமாக உள்ளதா ? மின்சார வெட்டு மேலும் வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதுபற்றி ஒவ்வொரு மாதமும் பரிசீலனை செய்து வருகிறோம். இந்த மாத இறுதியில் பரிசீலனை செய்து தான் சொல்லப்படும்.

திரு. எஸ். வடிவேல் : லைட்டை வீடுகளில் எரிக்காவிட்டாலும் பணம் கட்ட வேண்டியிருக்கிறது. நான் வீட்டைப் பூட்டி விட்டு வந்திருக்கிறேன். லைட் எரிக்காவிட்டாலும் பணம் கட்ட வேண்டுமென்று சொல்லு கிறார்கள். லைட் எரியவில்லை என்றால் பணம் வசூலிக்கக்கூடாது என்று அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : குறைந்த அடிப்படைக் கட்டணம் கட்டித்தான் ஆகவேண்டும். சர்வீஸ் கொடுத்துவிட்டால் அதைக் கட்டித்தான் ஆகவேண்டும். வேறு ஏதேனும் எரியாமலே அதிகமாகக் கட்டணம் வசூலிக்கின்ற நிலை இருந்தால் அதுபற்றி கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : வேனல் காலங்களில் மராமத்து வேலைகளை மதிய நேரங்களில் செய்கிறார்கள். மின்சார வெட்டு இருக்கும்போதும் மதிய நேரங்களில் மின்சாரத்தை கட் செய்கிறார்கள். இதனால் வீடுகளில் இருப்பவர்கள் மின்விசிறியைப் பயன்படுத்த முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இதற்குத் தனியாக ஒரு உத்தரவை அரசு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அப்படிக் குறிப்பிட்டு மதிய நேரத்தில் செய்யக் கூடாது என்று சொல்லுவதற்கு இயலாது. எந்தெந்த நேரத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது அவ்வப் போது பார்த்துச் செய்யப்படும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பில் கொடுக்கிற நேரத்தில் பல இடங்களில் சரியான வகையில் கொடுக்கப்படவில்லை. பயன்படுத்தப்பட்ட மின்சாரத்தைவிட அதிகமாகக் கட்டணங்கள் போடப்பட்டிருக்கின்றன. அம்மாதிரியான புகார்கள் கொடுக்கக் கூடிய நேரத்தில் எந்த இடத்தில் அணுக வேண்டுமென்றே தெரியவில்லை. இலாகாவில் சரியான முறையில் பதில் கிடைக்கவில்லை. இம்மாதிரியான, புகார்களைக் கவனிக்க தனி அதிகாரியைப் போட அமைச்சர் அவர்கள் உத்தரவு போடு வார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பில்கள் எல்லாம் இப்போது ஒழுங்காகக் கொடுக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல் உபயோகப்படுத்தப்பட்ட மின்சாரத்திற்கு மேல் அதிகமாகக் கட்டணம் போடப்பட்டிருந்தால் தனிப்பட்ட புகாராகக் கொடுத்தால் விசாரித்துப் பதில் சொல்லலாம்.

[1974 மார்ச் 15

திரு. கு. இராசமாணிக்கம் : தஞ்சை மாவட்டத்தில் ஆடுதுறை தொகுதியில் திருப்பனந்தாள், திருவிடைமருதூர் பஞ்சாயத்து யூனியன் கிராமங்களுக்கு மின்சார இணைப்பு இல்லாமல் இருக்கிறது. அவை களுக்கு இந்த ஆண்டு மின்சார இணைப்பு கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்புத் திட்டம் இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக முடிக்கப்படும் என்று கருதுகிறேன். பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் கொடுப்பதில் சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. பொதுவாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று திட்டமிட்டு மின்சார உற்பத்தியைப் பொறுத்து கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. என். கே. பழனிசாமி : நாம் மின்சாரத்தைக் கேரளத்தி லிருந்தும் மைசூரிலிருந்தும் வாங்குகிறோம். யூனிட்டுக்கு 8 பைசா, 12 பைசா கொடுத்து வாங்கி கன்ஸ்யூமர்சுக்கு 34 பைசா வசூலிப்பது அதிக மாக இல்லையா ? டொமஸ்டிக் சர்வீசுக்கு கன்செஷன் கொடுக்கக் கூடாதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : வாங்கிய விலையை மட்டும் கணக்கில் வைத்துச்சொல்லுகிறார்கள். விநியோகத்திற்கு 20, 22 பைசா யூனிட்டுக்கு செலவாகிறது. இப்போது வீடுகளில் மின்சாரம் பயன் படுத்துவதற்கு வசூலிக்கப்படுகிற கட்டணம் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டு பார்க்கும்போது சுமாராக விதிக்கப்பட்டிருக்கிறது என்றுதான் கூறவேண்டும்.

திரு. எம். சுரேந்திரன் : மின்சாரப் பற்றாக் குறை இருக்கிறது என்பது மட்டுமல்லாமல் பல இடங்களில் வோல்ட்டேஜ் குறைவாக இருப்பதால் விளக்குகள் சரியாக எரிவதில்லை. இயந்திரங்கள் ஓடுவதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. 1971-ல் போடப்பட்ட கம்பங்கள் அப்படியே இருக்கின்றன. ஆனால் மோட்டாருக்குக் கனெக்ஷன் கொடுக்கவில்லை என்ற புகார்கள் இருக்கின்றன. இவற்றை ஆராய்ந்து விரைவில் நிறை வேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தெளிவாகச் சொல்லியிருக் கிறேன். பம்ப் செட்டுக்கு மின்சாரம் வேண்டுமென்று இரண்டு மூன்று லட்சம் இப்போது கொடுப்பதற்காக காத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், ஒரு ஆண்டுக்கு 50,000 பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் கொடுத்து விட்டோம். இனி மேற்கொண்டு விஸ்தரிப்பதை உற்பத்தியைப் பொறுத்து தான் செய்ய வேண்டும். எந்த அளவுக்கு மின்சாரம் உற்பத்தி யாகிறதோ அந்த அளவுக்குத்தான் எல்லாவற்றுக்கும் தொழிற் துறைக் கும், விவசாயத் துறைக்கும் விஸ்தரிக்க உத்தரவிடப்படும். இந்த ஆண்டு முடிவில் இதுபற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி *இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]